2019 ஜூலை 16]

அவருடைய தொகுதியிலே உள்ள பகுதிகளின் நீண்ட பட்டியலை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே வசிக்கும் மக்களுக்குப் பட்டா தேவை என்று கேட்டுள்ளார்கள். பொதுவாகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, வரன்முறைப்படுத்தி கொடுக்கக்கூடிய இடங்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால், அவை குடியிருப்பு ஆக்கிரமிப்புகளாக ஏற்கெனவே இருப்பதால் அரசு நிலங்களிலே அவர்கள் அந்த குடியிருப்புகளில் வசிக்கிறார்கள். அவர்கள் வசிக்கும் நிலம் எந்த வகைப்பாட்டிலே இருக்கிறது என்பதையும் பார்த்து, அவை ஆட்சேபகரமாக இல்லாத புறம்போக்காக இருந்தால் உடனடியாகப் பட்டா கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆட்சேபகரமான புறம்போக்கு நிலமாக இருந்தால், அதற்கென்று இரண்டு அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. நான் நேற்றே இதுகுறித்து இந்த அவையில் சொன்னேன். அதற்கு காலஅவகாசம் முடிந்துவிட்டதாலே, அந்தக் கால அவகாசத்தை நீட்டிப்பு செய்வதற்கான கோப்பு தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு அரசாணைகளுக்கு கால நீட்டிப்பு கிடைக்கப்பெற்றவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, அந்தப் பகுதியில் குடியிருப்பவர்களின் நிலங்களை வரன்முறைப்படுத்தி, தகுதியுள்ளவர்களுக்குத் தகுதியான நிலத்தை தேர்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

119—

தொழிற்பேட்டை

***44511—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2019 ஜூலை 16

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் வழியில், தொழில் நகரமாம் திருப்பூர் மாநகருக்கு போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவும், மேம்பாலம் கட்டுவதற்கும், என்னுடைய பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லடம்–தாராபுரம் சாலையை தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்துவதற்கும், பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது சட்டப் பேரவையில் அறிவிப்பு செய்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பாகவும், மாவட்ட மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களையும் மாவட்ட அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொங்கலூர் ஒன்றியம் என்பது திருப்பூர் மாநகராட்சிப் பகுதியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்து, 20 கிலோ மீட்டர் தூரம் வரை விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். இதிலே 16 ஊராட்சிகள் உள்ளன. இங்கே

2019 ஜூலை 16]

விவசாயம்தான் பிரதான தொழிலாக இருக்கின்றது. மழையை நம்பித்தான் அந்த விவசாயிகள் விவசாயம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளார்கள். வேறு தொழில்கள் ஏதும் அங்கே இல்லை.

மேலும், திருப்பூர் மாநகரம் என்பது, இப்போது விரிவடைந்து வருகின்ற ஒரு நகரப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே இருக்கின்ற தொழிலதிபர்கள் எல்லாம் கிராமப்புறங்களை நோக்கி வருகின்ற நிலை இருக்கின்றது. எங்களுடைய பொங்கலூர் ஒன்றியத்தில் படித்த இளைஞர்கள் தொழில் தொடங்குவதற்கு உரிய வசதி வாய்ப்புகள் இல்லாத நேரத்திலே, திருப்பூருக்குத்தான் வேலைக்குச் சென்று வருகிற நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

பொங்கலூர் ஒன்றியம் என்பது ஒரு வறட்சியான பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், வேறு தொழில்கள் ஏதும் இல்லை என்கின்ற காரணத்தினாலும், இங்கே தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், தொழில் தொடங்க ஏதுவான இடம் இருக்கின்ற காரணத்தினாலும் பொங்கலூர் ஒன்றியப் பகுதியில் ஊரகத் தொழில் துறையின் சார்பாக ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணபதிபாளையம் என்ற இடத்தில் 1993 ஆம் ஆண்டு முதல் 17.10 ஏக்கர் நிலப்பரப்பில் 53 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் மற்றும் 30 தொழிற்கூடங்களுடன் ஏற்கெனவே ஒரு தொழிற்பேட்டை செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிய, பல்லடம் வட்டம் பொங்கலூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்* SIDCO *தொழிற்பேட்டை அமைக்க, திருப்பூர் மாவட்ட நிருவாகத்துடன்* SIDCO *நிறுவனத்தால் கலந்தாலோசிக்கப்பட்டது. மாவட்ட நிருவாகம், பல்லடம் வட்டம், பொங்கலூர் ஒன்றியத்தில்* SIDCO *தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான 15 முதல் 30 ஏக்கர் வரையிலான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லையென திருப்பூர் மாவட்ட நிருவாகம் தெரிவித்தது. எனவே, அவர் குறிப்பிட்ட பகுதியில் அரசு புறம்போக்கு நிலம்*

கிடைக்கப்பெறாததால், அங்கு SIDCO தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை என்பதனை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பல்லடம் வட்டத்தில் இருக்கின்ற 16 ஊராட்சிகளில் 8 ஊராட்சிகள் பல்லடம் வட்டத்திலும், 8 ஊராட்சிகள் திருப்பூர் தெற்கு வட்டத்திலும் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, பல்லடம் வட்டத்திலே அரசு புறம்போக்கு நிலம் இல்லையென்று சொன்னார்கள். பல்லடம் வட்டத்திலே கள்ளிப்பாளையம் கிராமத்திலே சுமார் 10 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. அதேபோல திருப்பூர் வட்டத்திற்குட்பட்ட அழகுமலை கிராமத்திலே கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான அரசு புறம்போக்கு நிலம் 10 ஏக்கருக்குமேல் உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கூடுதலாக இடம் தேவைப்படுகின்றபோது அரசு அந்த இடத்தைக் கையகப்படுத்தி, அரசு புறம்போக்கு நிலத்தோடு சேர்த்து, அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டும். அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கு சுற்றுவட்டங்களிலே திருச்சிராப்பள்ளி–கோயம்புத்தூர் சாலை, திருப்பூர்–ஒட்டன்சத்திரம் சாலை, திருப்பூர்–தாராபுரம் சாலை, பல்லடம்–தாராபுரம் சாலை ஆகிய தேசிய நெடுஞ்சாலைகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினாலே தொழில் துவங்கினால், அங்கு உற்பத்தி செய்கின்ற பொருட்களைக் கொண்டுவருவதற்கும், போக்குவரத்திற்கும் வசதிகள் ஏராளமாக உள்ளன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆகவே, அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். எனது கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுசென்று, ஆய்வு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டு, அமர்கின்றேன்.

2019 ஜூலை 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கவுண்டம்பாளையம் பகுதியில் மாநில அரசின் பொது உற்பத்தி வசதி மையம் அமைக்கும் திட்டத்தின்கீழ், 389.80 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அட்டைப் பெட்டி தயாரிக்கும் குழுமத்திற்கு 750 இலட்சம் ரூபாய் அரசு மானியம் வழங்க, 4–7–2019 அன்று அரசாணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாரணாபுரம் பகுதியில் மத்திய அரசின் பொது மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் மாநில அரசின் மானியத் தொகை 300 இலட்சம் ரூபாயுடன் 1,535.93 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பின்னலாடை குழுமத்திற்கு பொது வசதி மையம் அமைக்க 7–5–19 அன்று மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் பல்லடம் வட்டத்தில் 1762.23 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் விசைத்தறி குழுமத்திற்கு பொது வசதி மையம் அமைக்க, மத்திய அரசின் மானியத் தொகையுடன், மாநில அரசு 176.22 இலட்சம் ரூபாய் மானியம் வழங்க, கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு, மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய பொங்கலூர் ஒன்றியத்தில், கள்ளிப்பாளையம் கிராமம் மற்றும் அழகுமலை கிராமத்தில் அரசு நிலங்கள் கண்டறியப்பட மாவட்ட நிருவாகத்தோடு SIDCO நிறுவனமும் கலந்தாலோசித்து, மாண்புமிகு தமிழக முதல்வரின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.